**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Life Ethics in the Tirumurai

**Dr. A. Vinnarasi*,**

*Assistant Professor, Department of Tamil, Nirmala College for Women (Autonomous), Coimbatore - 18.*

*Correspondence: srvinnarasi4@gmail.com, Tel: +91752996590

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Sangam literature reveals the thought processes, associated norms, practiced ethics, and beliefs that emerged in the lives of ancient Tamils. Establishing the path of life in a righteous manner constitutes the "Way of Life." The term Neri (Path) signifies a 'way' or 'method.' In the lives of ancient people, specific norms existed for various life components such as literature, politics, art, friendship, love, valor, and relationships. In the Tamil way of life, one can observe the progression of Aram (Virtue), seeking Porul (Wealth) through virtue, attaining Inbam (Pleasure) through wealth, and ultimately reaching Veeduperu (Liberation) through these three. Universal values such as honesty, truth, love, patience, and discipline are considered the exalted ethics of life.

While literature is an art form connected to emotions, it can also be regarded as a historical document that records the thoughts and practices of the people of that time. Not only in Sangam literature but also in Bhakti literature, various cultural and ethical elements have been adapted to suit social living. These serve as pillars for the character development of every individual. Changes occur in the heart and actions of every individual according to time and circumstance, forming the destiny of human life. To ensure society achieves happiness and peace, and to ensure individual lives attain self-sufficiency, duties and ethics serve as the guiding channels. This is precisely what the Tirumurai, epics, and kavyas proclaim.

Bhakti literatures serve as tools that lead people toward a noble path through the ages. The "Life Ethics" are those principles categorized and compiled by man himself to live as a true human being—to live prosperously within this world. This chapter aims to explain such life ethics through the perspective of the Tirumurai.

**Keywords:** *Tirumurai, Moral Ethics, Society, Way of Life, Self-sufficiency*.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* ***E-ISSN 2456-5148***
Volume 4 | Issue 05, February 2026

# திருமுறைகளில் வாழ்வியல் அறங்கள்

***முனைவர் ஆ. விண்ணரசி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நிர்மலா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 18.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய தமிழருடைய வாழ்க்கையில் தோன்றிய சிந்தனைப்போக்கு, அதனோடு தொடர்புடைய நெறிமுறைகள், கடைப்பிடித்த அறநெறிகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைச் சங்க இலக்கியப்பாடல்கள்புலப்படுத்துகின்றன. வாழ்க்கைப் பாதையைச் சரியான முறையில் அமைத்தல் வாழ்வியல் நெறியாகும். **'நெறி' என்றால் 'வழி'** எனப் பொருள்படும். பண்டைய கால மக்களின் வாழ்வில் இலக்கியம், அரசியல், கலை, நட்பு, காதல், வீரம், உறவு போன்ற வாழ்வியற் கூறுகளுக்கென நெறிகள் காணப்படுகின்றன. தமிழரின் வாழ்வில் நெறியானது அறம், அறத்தின் வழியாகப் பொருள்தேடல், பொருளின் வழி இன்பம் பெறுதல் இம்மூன்றின் வழி வீடுபேறு அடைதல் போன்ற நெறிகளைக் காணலாகிறது. எங்கும் என்றும் பின்பற்றத் தக்க நேர்மை, உண்மை, அன்பு, பொறுமை, கட்டுப்பாடு போன்ற உயர்ந்த தனிமனித மதிப்புக்கள் யாவும் வாழ்வின் நெறிகளாகக் கருதப்படுகின்றன. இலக்கியம் என்பது உணர்ச்சிகளின் தொடர்புடைய ஒரு கலை வடிவமென்றாலும் அக்கால மக்களின் சிந்தனைகளையும் செயல்முறைகளையும் பதிவு செய்துள்ள வரலாற்று ஆவணமாகக் கருதமுடிகிறது. சங்க இலக்கியத்தில் மட்டுமன்றி, பக்தி இலக்கியத்திலும்சமூக வாழ்வியலுக்கேற்ப பற்பல பண்பியல் கூறுகள் தகவமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு தனிமனிதனின் பண்பாக்கத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளன. காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஒவ்வொரு தனிமனித உள்ளத்திலும் செயலிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை மனிதனின் வாழ்வில் நியதியாக அமைகிறது. சமுதாயம் மகிழ்ச்சியும் அமைதியும் அடைந்திட, தனிப்பட்ட வாழ்வு தன்னிறைவு பெற்றிட, கடமைகளும் நெறிகளும் வாய்க்காலாக விளங்குகின்றன. இதனையே, திருமுறைகளும் இதிகாசங்களும் காப்பியங்களும் இயம்புகின்றன. மக்களைக் காலந்தோறும் உயர்நெறியில் வழிநடத்திடும் கருவிகளாக பக்தி இலக்கியங்கள் அமைகின்றன. வையத்துள் வாழ்வாங்கு வாழ மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அவனே பகுத்துத் தொகுத்துக் கொண்டவை வாழ்வியல் நெறிகளாகும். இத்தகைய வாழ்வியல் நெறிகளை திருமுறைகள் வழிநின்று விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

**திறவுச்சொற்கள் 1.**திருமுறைகள் 2.அறநெறிகள் 3. சமுதாயம் 4. வாழ்வியல் 5. தன்னிறைவு

**முன்னுரை**

பல்லவர் காலம் **"பக்தி இலக்கிய காலம்"** என்று போற்றப்படுகின்றது. பக்தி இலக்கியங்களில் சைவ வளர்ச்சிக்கு நாயன்மார்கள் பெரிதும் துணை நின்றனர். நாயன்மார்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்திப் பக்திப்பெருக்கத்தைத் தமிழ்நாடு முழுவதும் பரவுமாறு செய்தனர்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்துத் தம்புகழ் பரவுமாறு செய்த ஒப்பற்ற பேரருளாளர்கள் நாயன்மார்கள்" என்பதைப் பன்னிரு திருமுறைகள் காட்டுகின்றன. தனி மனிதனின் நலனுக்காக அன்றி மானிட சமுதாயம் முழுவதும் பயன்பெறும்படியான கோட்பாடுகளை உள்ளடக்கியது பன்னிரு திருமுறைகளாகும். இந்நூல், இறைவனை அடைவதற்கான வழிகளை மட்டுமல்லாமல், சமுதாயத்தில் எவ்வாறு ஒழுக்கமாகவும் நேர்மையாகவும் வாழ வேண்டும் என்பதையும் போதிக்கின்றது. இல்லறத்தில் ஒழுக்க நெறியாக, சிறந்த குழந்தை வளர்பினை, தாய்மையின் தூய்மையினை, பிறன்மனை நோக்காப் பேராண்மையினை, உயரிய விருந்தோம்பல் நெறியைப் போற்றுவதாகப் பன்னிருதிருமுறைகள் எடுத்துரைக்கின்றன. இலக்கியங்கள் கூறும் அறங்கள், சங்க இலக்கியத்தில் காணலாகும் காதலும் வீரமும், நீதி நூல்கள் கூறும் அறநெறிகள், காப்பியங்களில் விளங்கும் நான்கு வகையான உறுதிப் பொருள்கள், அன்புநிலை, கொடைப்பண்பு, கால நெறி, அறமே உயிர், மன்னர் நெறி, போர் அறம், மனத்தூய்மை, பணிவுடமை, அருள்நெறி, மறத்தலும் அறம் போன்றவை தொகுத்து விளக்குவதாக இவ்வாய்வு அமைகிறது.

**இறைபக்தி**

தெய்வத்தை முன்னிருத்தி மனிதன் அனைத்தையும் பார்க்கின்றான். அனைத்துச் சக்தியின் இயக்கம் தெய்வம் என்று உணர்கிறபோது அவன் பரவசம் அடைகின்றான். இறைபக்தி தனி மனித வாழ்க்கையில் ஒழுக்கத்தையும், அன்பையும் போதிக்கின்றன. இறைவனின் திருவருளால் கல்லைக் கூட தெப்பமாக மாற்ற முடியும் என்பதை நாவுக்கரசர்,

**"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**

**நற்றுணை யாவது நமச்சி வாயவே"**

**(நமசிவாயப்பதிகம்:பா.எ.-1)**

என்ற பாடல் வழி உணர்த்துகிறார். மேலும;; தாயை விட சிறந்த கருணை உள்ளவன் இறைவன் என்பதனை "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தின் வழி உணர்த்துகின்றார்.

**மனிதநேயம்**

திருமுறையில் சகமனிதர்களை வெறுத்து ஒதுக்காது, அன்பு செய்து, ஈரம் கலந்த இன்மொழி பேசுமாறு அறிவுறுத்துகிறது. சக மனிதன் பசித்திருக்கும் போது உணவில் ஒரு பிடியை அவனுக்கு அளித்துவிட்டு உண் என்கிறது திருமுறை.

**"யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை**

**யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை**

**யாவர்க்கு மாம் உண்ணும் போதொருகைப்பிடி**

**யாவர்க்கு மாம் பிறர்க்கின்னுரைதானே"**

**(திருமந்திரம், பா.எ:252)**

என்று திருமூலர் கூறுகிறார். மேலும்,

**"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்**

**பரிந்து நீ பாவியேனுடைய"**

**(8 ஆம் திருமுறை-37:பதி: 9)**

என்று மாணிக்கவாசகர் மனிதநேயத்தை வலியுறுத்துகிறார். சைவம் மனிதநேயத்தை மையமாகக் கொண்டது என்பதை இவ்வடிகள் சாற்றி நிற்கிறது.

**கொடையுள்ளம்**

பயன்கருதாது ஒருவருக்குச் செய்யக்கூடிய, எந்த ஒரு உதவியும் கொடை எனப்படும். கொடுத்து மகிழ்கின்ற உள்ளமே கொடையுள்ளம் எனப்படும். இந்தக் கொடைத்தன்மை சிறந்த அறநெறிக் கோட்பாடாகத் திருமுறையில் வலியுறுத்தப்படுகின்றது.

**"அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்**

**செவ்விய னாசிப் பிறர் பொருள்வவ் வன்மின்**

**செவ்விய னாகி சிறந்துண்ணும் போதொரு**

**தவ்விக் கொடுமிகன் தலைப்பட்ட போதே"**

**(திருமந்திரம், பா.எ:196)**

என்று வாழ்வியல் தழைக்க உதவும் அறநெறி உள்ளத்திலே பூத்துக் குலுங்க வேண்டும் என்கிறார் திருமூலர். கோயிலினுள் இருக்கும் இறைவனுக்குக் கொடுப்பது இல்லாதோருக்குச் சென்றடையாது. ஆனால், நடமாடும் கோயிலாக இருக்கக்கூடிய மனிதருக்குக் கொடுப்பது இறைவனையே சென்று சேரும். இதனைத் திருமூலர்,

**"படமாடக்கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**

**நடமாடக்கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா**

**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**

**படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"**

**(திருமந்திரம், பா.எ:1821)**

என்ற பாடல் வழி குறிப்பிடுகின்றார். மேலும், இல்லை என்று ஒருவர் கேட்ட பொழுது, மனமகிழ்ச்சியோடு யார் கொடுத்து மகிழ்கிறார்களோ, அவர்களின் உள்ளத்தைப் பெருமான் இடமாகக் கொண்டு வாழ்வார் என்கிறார் நாவுக்கரசர். இதனை,

**"இன்மையால் சென்று இரந்தோர்க்கு**

**இல்லையென்னாது இந்து உவக்கம்**

**தன்மையார் ஆக்கூரில் தான் தோன்றிமாடமே"**

**(ஆறாம் திருமுறை, பா.எ.-10)**

என்ற பாடல் அடி உணர்த்துகின்றது.

**ஒருமைப்பாடு**

வறியார்க்கு வாழ்வளித்தல், சாதி, மதம், மொழி, இனம், நாடு, தன் உடைமை முதலிய அனைத்தையும் மனிதன் கடந்து வெளிவரும் போது தான் எல்லார்க்கும் எல்லாம் என்றும், எதிர்பார்ப்பு நனவாகும் என்று திருமுறைகள் அறுதியிட்டுக் காட்டுகின்றன. நாயன்மார்கள் அனைவரும் தம்மிடம் உள்ள அனைத்தையும் கொடுத்துச் சாதி, மத வேறுபாடின்றி வாழ்ந்தனர். இதனை நாவுக்கரசர்,

**"அங்கமெல்லாம் குழைந்து அழுகுகொழுகு நோயாய்**

**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**

**கங்கைவார் சடைக்கரந்தார்க்கு கன்பராகில்"**

**(6 ஆம் திருமுறை - 95: பதிகம்-10)**

சாதி வேறுபாடு சைவ நெறியில் இல்லை என்பதையும் உலக மக்கள் அனைவரும் ஒரே இனம் என்பதையும் ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகின்றார். மேலும் திருநாவுக்கரசர், **"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்**

**கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்"**

**(5 ஆம் திருமுறை -124 பதிகம் - 3பாடல்)**

என்ற தேவாரப் பாடலானது அறிவற்ற மக்களே வெறும் கோத்திரத்தையும் குலத்தையும் கொண்டு என்ன செய்ய முடியும் என்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக உணரமுடிகிறது.

**கடமை உணர்வு**

கோட்புலி நாயனார் இறைவனுக்காக ஒதுக்கி வைத்த தானியத்தைச் சுற்றத்தார் கடும்பஞ்சம் வந்தபோது எடுத்து உண்டனர். போருக்குச் சென்று வந்த கோட்புலி நாயனார் இச்செய்தி கேட்டதும் தன் சுற்றத்தார் அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்தினார். இதைப் பெரியபுராணம்,

**"தந்தையார் தாயார் மற்றுடன் பிறந்தோர் தாரங்கள்**

**பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்**

**எந்தையார் திருப்படி மற்றுண்ண இசைத்தார்களையும்**

**சிந்தவாள கொடு துணித்தார் தீயவினைப் பவந்துணிப்பார";**

**(12 - கோட்புலி நாயனார் புராணம்-9)**

இவ்வாறு கடமையுணர்வே கோட்புலி நாயனாருக்கு முக்கியமாகத் தெரிந்தது அறியலாகிறது.

**பணிவு**

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பணிவு என்ற அறநெறி அவசியம். அறுபத்து மூன்று நாயன்மார்களைக் காட்டிய சுந்தரர், இவ்வடியவர்கள் அனைவருக்கும் அடியேன் என்று கூறியுள்ளார்.

**"பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்**

**பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்**

**சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்"**

**(திருத்தொண்டர் தொகை, பா.எ - 10)**

என்று தன் பணிவினைத் தெரியப்படுத்துவதை இவ்வரிகள் வழி அறியலாகிறது.

**உதவி செய்தல்**

மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு வாழ்தல் நலம்.

இதனை,

**“தொழுவர் தங்கள் துயர் தீர்ப்பாய”;**

**(7ஆம் திருமுறை-52: பதிகம் - 3)**

**“பங்காய் மண் சுமந்து அருளிய பரிசும்”**

**(8 ஆம் திருமுறை-2: பதிகம் - 47)**

என்று பன்னிரு திருமுறை எடுத்தியம்புகின்றது. ஆகவே உதவி செய்தலே மனிதப் பண்புக்குத் தலைசிறந்த சமுதாயக் கடமை ஆகும்.

**விருந்தோம்பல்**

வந்தாரை வரவேற்று அறுசுவை உணவினை இட்டு மகிழ்வது தமிழரின் பண்பாடு. அவ்வகையில் திருமுறையில் திருஞானசம்பந்தர் சீர்காழிப்பகுதியில் வாழும் மக்களைப் புகழும்பொழுது,

**“மாலும் பிரம்மனும் அறியா மாட்சியான்**

**தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்**

**ஏலம் பதிபோலும் அரந்தோர்க்கு எந்நாகும்**

**காலம் பகராதர் காழிந் நகர்தானே;” (தேவாரம், பா.எ-91)**

என்ற பாடல் வாயிலாகக் காலம், நேரம் பாராமல் வாரி வழங்கி விருந்தோம்பலில் மகிழ்ந்தார்கள் சீர்காழிப்பதி மக்கள் என்பதனை விளக்குகிறார். மேலும் இளையான்குடி மாறனார், விதைப்பதற்காக வைத்திருந்த நெல்லை எடுத்து வந்து ஒரு விருந்தினருக்காக பயன்படுத்தியது, வறுமையிலும் விருந்தோம்பல் சிறந்திருந்தது என்பதை நிறுவுகின்றது. அதைப்போலவே அப்பூதியடிகளும் தன் மகன் இறந்த செய்தியினை மறைத்து, நாவுக்கரசருக்கு உணவு பரிமாறினார். விருந்தோம்பல் பற்றிய செய்திகளும் திருமுறையில் இடம்பெறுகின்றன என்பதை மெய்யபிக்கலாகிறது.

**கல்வி**

கல்வி ஒன்றே அனைத்து மக்களையும் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபடவைக்கிறது. "கல்வியே நாட்டின் விடுதலை" என்ற கருத்தைத் திருமுறையும் வலியுறுத்துகிறது. இதனை,

**"தவமுயன் றரிதில் பெற்ற தனிஇளங்குமரன் நாளுஞ்**

**சிவ முயன்றடையுந் தெய்வக் கலை பல திருந்த ஓதிக்**

**கவனவாம் புரவியானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்**

**பவமுயன்றதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான்"**

**(12 - திருநாவுக்கரசர் சிறப்பு - 18)**

என்ற பெரிய புராண அடிகளால் அறியலாம்.

**ஐம்புலனடக்கம்**

ஐம்புலனடக்கம் என்பது மனிதனின் ஐந்து புலன்களான கண், காது மூக்கு, நாக்கு மற்றும் தோல் ஆகியவற்றின் செயல்களை கட்டுப்படுத்துவதாகும். இது ஆன்மீக முன்னேற்றம் மற்றும் மன அமைதிக்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இந்த புலன்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம், ஒருவர் தனது எண்ணங்களையும் செயல்களையும் சீராக வைத்துக்கொள்ள முடியும். ஐம்புலன் வழியே தாம் செல்லாமல் அவை தம் வழியிலே நிற்கும்படி அடக்கி ஆள வேண்டும். இதனை,

**"மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்**

**புலனைந்தின் வழியடைத்து"**

**(8ஆம் திருமுறை - 2- 21)**

என்ற திருமுறை பாடல் உணர்த்துகின்றது. சொற்கள் மனிதனை வாழவும் வைக்கும், வீழவும் வைக்கும். அத்தகைய சொற்கள் நாவிலிருந்து பிறக்கின்றன. அத்தகைய நாவினைக் காத்தல் என்பது அவசியம். இதனை மாணிக்கவாசகர் இறைவன் தலையை வணங்குவதற்குத் தந்தான். வாயை வாழ்த்துவதற்கு வழங்கினான் என்றார்.

**"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து**

**இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்**

**அணங்கொ டணிதில்லை அம்பலத்தே யாடுகின்ற**

**குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"**

**(8ஆம் திருமுறை-13: 7)**

என்று மாணிக்கவாசகர் நாவடக்கத்தின் பயனை எடுத்துரைத்துள்ளதை அறியமுடிகிறது.

**பகைவருக்கும் நன்மை செய்தல்**

தீமையைச் செய்தவருக்கும் நன்மை செய்திடல் வேண்டும். இதனை வள்ளுவர்,

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்"**

**(குறள் எண் - 314)**

என்ற குறள் வழி உணர்த்துகின்றார். மேலும் திருமுறையானது,

**"அரக்கன் ஆற்றல் அழித்தவனுக்கு**

**அருள் பெருக்கி நின்ற"**

**(3ஆம் திருமுறை - 5: 8)**

என்ற கூற்றால், திருவடி விரல் ஒன்றினால் அரக்கனது ஆற்றலை அழித்துப் பின் அவனுக்கு அருள் செய்த தன்மை கொண்டவராக இறைவன் திகழ்கிறார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**முடிவுரை**

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தை வளர்க்கவும், இறை பக்தியினை மேலோங்கச் செய்வது மட்டுமல்லாமல் சமூகத்தினை மேம்படுத்துவதற்கான நற்கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. பன்னிரு திருமுறைகள் மனிதரை நெறிப்படுத்துகின்றன, முறைப்படுத்துகின்றன, ஒரு தூய்மையான வாழ்க்கை முறைக்கு வித்திடுகின்றன. வேறுபாடுகள் மறைந்து ஒருமை தோன்றி ஒருவிதமாக மலரப்பயன்படுகின்றன. வாழ்க்கை என்பது மாயம் என்பதும், மனித வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்பதும் திருமுறைகள் காட்டும் கொள்கை, மனித இனத்திற்குச் சமயம் பெரிதும் பயன்படவேண்டும் எனும் அருங்கருத்தை பன்னிரு திருமுறைகள் வலியுறுத்துகின்றன. இல்லறம் என்பது தன் தேவைகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அனைத்து மக்களின் வாழ்க்கைக்கும்

பயன்படும்படியாக அமையும் ஒரு தொண்டு நெறியை பன்னிருதிருமுறைகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், தனி மனித ஒழுக்கம், உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவது, உதவிடும் மனப்பாங்கு, விருந்தோம்பல் பண்பு, கடமையுணர்வு, பணிவு, மனிதநேயம், மற்றும் சமத்துவக் கொள்கை போன்ற பல்வேறு வாழ்வியல் நெறிகளை உள்ளடக்கியதாக திகழ்கின்றன. மனித நேயம், குற்றமில்லாத வாழ்க்கை, பண்புள்ளம், வீரம், உளவியல், உதவும் மனப்பாண்மை ஆகிய பண்புகளைப் பன்னிருதிருமுறைகள் தன்னகத்தே கொண்டுள்ள பான்மையினைத் தொகுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகிறது.

**References: (மேற்கோள் நூல்கள்)**

1. **Subramaniam, S. V., editor.** *Panniru Thirumurai* [பன்னிரு திருமுறை]. 3rd ed., Manivasagar Padhippagam, 2012.
2. **Thiruvalluvar.** *Thirukkural: Parimelalhagar Urai* [திருக்குறள் - பரிமேலழகர் உரை]. 1st ed., Ram Prasuram, 2003.
3. **Sekkiizhaar.** *Periya Puranam* [பெரிய புராணம்]. Edited by S. V. Subramaniam, Manivasagar Padhippagam, 2012.